காஞ்சிபுரம் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை உத்திரவு:—
முன்னிலை:—திரு.கா.மகேந்திரன்.பி.இ

ந.க.எண். 8403 /2019/எப்1 நாள் 22.10.2019
அ.ம.வ,மு.எண்.161 –208 /2019/எப்1

| | |
|---|---|
| பொருள் | அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் திட்டம் – காஞ்சிபுரம் நகராட்சி – பெரியத் தோட்டம் கிராமம் சர்வே எண் 10/1A, 11/1, 11/2B, 11/2C, 11/2D, 11/2E ல் 6.08 ஏக்கர் (அ) 264844 சதுர அடி பரப்பளவு உள்ள மனைப்பிரிவிற்கு – நகர் ஊரமைப்பு துறையால் வரன் முறைப்படுத்தி ஒப்புதல் வழங்கியது – திரு அண்ணாமலை நகர் மனை எண்கள் 1, 2, 8, 36 முதல் 63 வரை , 75 முதல் 77 வரை மற்றும் 81 முதல் 94 வரையிலான மனைகளுக்கு வரன்முறைப்படுத்தி உத்திரவு வழங்கப்படுகிறது – தொடர்பாக |
| பார்வை | 1. அரசாணை நிலை எண்.78 தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 04.05.2017,<br>2. அரசாணை(நிலை) எண்.172, தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள் 13.10.2017<br>3. உறுப்பினர் செயலர் காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் ம.வ./ கா உ தி கு வரன்முறைப்படுத்துதல் எண் 06 ( R) /2018<br>4. மன்ற தீர்மானம் நாள் 15.10.2019<br>5. சாலை மற்றும் பூங்கா இடம் தான பத்திரம் எண் 4501/2018 நாள் 18.09.2018 |

--

**உத்திரவு:—**

காஞ்சிபுரம் மாவட்டம் காஞ்சிபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பெரியத் தோட்டம் கிராமம் சர்வே எண் 10/1A, 11/1, 11/2Б, 11/2C, 11/2D, 11/2E ல் 6.08 ஏக்கர் (அ) 264844 சதுர அடி பரப்பளவு உள்ள அனுமதி பெறாத மனைப்பிரிவினை பார்வை 1, மற்றும் 2 ல் கண்டுள்ள அரசாணைகளின் படியும் பார்வை 3 ல் கண்டுள்ள உறுப்பினர் செயலர் காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் வரன்முறைப்படுத்துதல் எண் 06 ( R) /2018 ஒப்புதலின் படி மேற்படி மனைக்கு வரன்முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பார்வை 4 ல் கண்டுள்ள நகரமன்ற தீர்மானத்தின் ஒப்புதல் பெறப்பட்டு பார்வை 5 ல் கண்டுள்ள தானப்பத்திர ஆவண எண் 4501/2018 ல் சாலை மற்றும் பூங்கா இடம் நகராட்சிக்கு தானமாக அளிக்கப்பட்டு பத்திரம் பதிவு செய்து நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது, அதன் அடிப்படையில் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் அமைந்துள்ள வீட்டுமனைகளை முறைப்படுத்த வெளியிடப்பட்டுள்ள அரசாணைப்படி, கீழ் குறிப்பிட்டுள்ள பட்டியல் விவரப்படி க்கு நகர் ஊரமைப்புதுறைக்கு செலுத்த வேண்டியுள்ள வரன்முறைப்படுத்துதல் கட்டணம் 1ச.மீ க்கு – ரூ. 75 வீதம் அரசு கணக்கில் ஸடேட் பாங்க் ஆப் இந்தியா வங்கியில் செலுத்தப்பட்டுள்ளது. நகராட்சிக்கு செலுத்த வேண்டிய வளர்ச்சிக் கட்டணம் 1ச.மீ க்கு – ரூ250 வீதம் நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

| வ.எண் | மனை எண் | வரன்முறைப்படுத்துதல் கட்டணம் | வளர்ச்சிக் கட்டணம் | நகராட்சி சலான் எண் |
|---|---|---|---|---|
| 1 | 1 | 13625 | 45410 | 0000383 |
| 2 | 2 | 10870 | 36235 | 0000385 |
| 3 | 8 | 18395 | 61315 | 0000386 |
| 4 | 36 | 16865 | 56210 | 0000387 |
| 5 | 37 | 16305 | 54345 | 0000388 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | 38 | 16025 | 53420 | 000389 |
| 7 | 39 | 15750 | 52490 | 0000390 |
| 8 | 40 | 13365 | 44545 | 0000391 |
| 9 | 41 | 13930 | 46430 | 0000392 |
| 10 | 42 | 16725 | 55745 | 0000393 |
| 11 | 43 | 16725 | 55745 | 0000394 |
| 12 | 44 | 16725 | 55745 | 0000395 |
| 13 | 45 | 16725 | 55745 | 0000396 |
| 14 | 46 | 16725 | 55745 | 0000397 |
| 15 | 47 | 16725 | 55745 | 0000398 |
| 16 | 48 | 16725 | 55745 | 0000399 |
| 17 | 49 | 16725 | 55745 | 0000400 |
| 18 | 50 | 15970 | 53235 | 0000401 |
| 19 | 51 | 13800 | 45990 | 0000402 |
| 20 | 52 | 16725 | 55745 | 0000403 |
| 21 | 53 | 16725 | 55745 | 0000404 |
| 22 | 54 | 16725 | 55745 | 0000405 |
| 23 | 55 | 16725 | 55745 | 0000406 |
| 24 | 56 | 16725 | 55745 | 0000407 |
| 25 | 57 | 16725 | 55745 | 0000408 |
| 26 | 58 | 16725 | 55745 | 0000409 |
| 27 | 59 | 16725 | 55745 | 0000410 |
| 28 | 60 | 10765 | 35885 | 0000411 |
| 29 | 61 | 14320 | 47730 | 0000412 |
| 30 | 62 | 25920 | 86400 | 0000413 |
| 31 | 63 | 18955 | 63175 | 0000414 |
| 43 | 75 | 14340 | 47800 | 0000415 |
| 44 | 76 | 12750 | 42595 | 0000416 |
| 45 | 77 | 12800 | 42665 | 0000417 |
| 49 | 81 | 17580 | 58595 | 0000418 |
| 50 | 82 | 16725 | 55745 | 0000426 |
| 51 | 83 | 15795 | 52655 | 0000427 |
| 52 | 84 | 14430 | 48100 | 0000428 |
| 53 | 85 | 13105 | 43685 | 0000429 |
| 54 | 86 | 16725 | 55745 | 0000430 |
| 55 | 87 | 20780 | 69260 | 0000431 |

69

| | | | | |
|---|---|---|---|---|
| 56 | 88 | 14710 | 49030 | 0000432 |
| 57 | 89 | 13935 | 46455 | 0000433 |
| 58 | 90 | 11995 | 39975 | 0000434 |
| 59 | 91 | 11235 | 37440 | 0000435 |
| 60 | 92 | 13770 | 45895 | 0000436 |
| 61 | 93 | 13935 | 46455 | 0000437 |
| 62 | 94 | 16940 | 56465 | 0000438 |

**எனவே மேற்படி மனை எண்கள் 1, 2, 8, 36 முதல் 63 வரை , 75 முதல் 77 வரை மற்றும் 81 முதல் 94 வரையிலான மனைகளுக்கு** மட்டும் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வரன் முறைப்படுத்தி உத்திரவு வழங்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்:–</u>

1. அரசாணையில் அறிவிக்கப்பட்டுள்ள சலுகைகளின்படி, மனை மட்டுமே முறைப்படுத்தப்படுகிறது.
2. இம்மனைப்பிரிவு முறைப்படுத்துதல் உத்திரவு திட்ட மற்றும் கட்டிடத்திற்கான அனுமதி உத்திரவு 'இல்லை'. இவ்வுத்திரவின் அடிப்படையில் திட்ட மற்றும் கட்டிட அனுமதிக்காக எவ்வித உரிமையும் கோரக்கூடாது.
3. மனையில் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு விதிகளுக்குட்பட்டு திட்ட மற்றும் கட்டிட அனுமதி கோரி தனியே விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.
4. முறைப்படுத்தப்பட்டமனையில் கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்படும்போது திட்ட மற்றும் கட்டிட அனுமதிக்காக தனியே விண்ணப்பித்துக்கொள்ளப்பட வேண்டும்.

ஆணையாளர்
காஞ்சிபுரம் நகராட்சி.

பெறுநர்– திருமதி. ரா. குமாரி 6, மகாநாடு தர்மராயர் தெரு காஞ்சிபுரம்

நகல்– 4 நீ இணை சார் பதிவாளர் காஞ்சிபுரம்

**உறுப்பினர் செயலர்(பொ), காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்**

**அவர்களின் நடவடிக்கைகள்,**

**முன்னிலை : திரு.ஆர்.கிருஷ்ணமூர்த்தி, பி.இ.,**

**நாள். 23.01.2018.**

**ந.க.எண். 788/2017/காஉதிகு**

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவு - வரன்முறைபடுத்துதல் திட்டம் 2017 - காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழும அலுவலகம் - காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் வட்டம் - காஞ்சிபுரம் பெருநகராட்சி – பெரியதோட்டம் கிராமம் - சர்வே எண்கள்.10/1A, 11/1, 2B, 2C, 2D, 2E-ல் 6.08 ஏக்கர் இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண்.78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி ந.வ4(3) துறை, நாள்.04.05.2017.
2. அரசாணை எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி ந.வ4(3) துறை, நாள்.13.10.2017.
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.13193/17/எல்ஏ2, நாள். 30.10.2017, 31.10.17, 07.11.17.
4. மனுதாரர் திருமதி.R.குமாரி, காஞ்சிபுரம் என்பவரின் விண்ணப்பம் நாள்.10.11.2017.
5. Online Application Registration No.DTCP/L/0016155/2017 dt:09.10.2017.

********

**உத்தரவு:-**

பார்வை 1 மற்றும் 2-ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை 3-ல் கண்ட நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டி நெறிமுறைகளின்படியும் பார்வை 4-ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் வட்டம், காஞ்சிபுரம் பெருநகராட்சி, பெரியதோட்டம் கிராமம் - சர்வே எண்கள்.10/1A, 11/1, 2B, 2C, 2D, 2E-ல் 6.08 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் (In principle approval) வழங்கப்படுகிறது.

மேற்படி அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **ம.வ./காஉதிகு/எண்.6(R)/2018** என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

2..

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பளவு | - | 6.08 ஏக்கர் அல்லது 264844.00 சதுர அடி |
| மொத்த மனைகள் | - | 94 (1 to 94) |
| விற்பனை செய்த மனைப் பரப்பு | - | 56333.00 சதுர அடி |
| விற்பனை செய்யப்படாத மனைப் பரப்பு | - | 140212.00 சதுர அடி |
| OSR பரப்பளவு | - | 14787.00 சதுர அடி - 10.54% |

<u>செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள்</u>

1. பரிசீலனை கட்டணம் online மூலம் ஒரு மனைக்கு ரூ.500/- வீதம் விற்பனை செய்யப்படாத 65 மனைகளுக்கு பெறப்பட்டுள்ளது. இதர விற்கப்பட்ட 29 மனைகளுக்கு ஒரு மனைக்கு ரூ.500/- வீதம் உறுப்பினர் செயலர், காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் என்ற பெயரில் வங்கி வரைவோலை (Demand Draft)பெறப்படவேண்டும்.
2. வரன்முறைப்படுத்தல் கட்டணம் ஒவ்வொரு மனைக்கும் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.60/- வீதம் கீழ்க்கண்ட அரசு கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

   **<u>Head of Department Code 26-02</u>**
   0212, Urban Development - 60- Other Urban
   Development Schemes 800- Other Receipts.
   AT Receipts under Regularisation
   Charges of Unapproved Layouts and Plots - DTCP
   (DPC:0217-60-800-AT-007)

3. வளர்ச்சி கட்டணம் ஒவ்வொரு மனை பரப்பிற்கேற்ப ஒரு சதுர மீட்டருக்கு ரூ.250/- வீதம் உள்ளாட்சியின் தனிக்கணக்கில் பெற்ற பின்னரே இம்மனைப்பிரிவில் அமையும் ஒவ்வொரு மனைக்கும் தனித்தனியாக உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.
5. மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகள் மற்றும் OSR இடம் உள்ளாட்சிக்கு தானப்பத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

மேலும் கணக்கு தலைப்பினில் செலுத்தப்பட்ட விபரங்கள் உரிய கணக்கு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளதை இவ்வலுவலகத்திற்கு விபரம் உடன் அனுப்பிட தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் கட்டணங்கள் செலுத்திய பின்னரே சம்மந்தப்பட்ட மனைகளுக்கு அபிவிருத்தி செய்யவோ அல்லது விற்பனை செய்யவோ அனுமதிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இம்மனைப்பிரிவுக்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு மேல் நடவடிக்கைகாக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

உறுப்பினர் செயலர் (பொ)
காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்
காஞ்சிபுரம்.

23/1/18

**இணைப்பு**
மனைப்பிரிவு வரைபடம் 2 நகல்கள்.

**பெறுநர்**
ஆணையர்,
காஞ்சிபுரம் பெருநகராட்சி,
காஞ்சிபுரம்.

**நகல்**

1. திருமதி.R.குமாரி,
   23/6, மாகாநாடு தர்மராயர் தெரு,
   காஞ்சிபுரம் - 631 501.

2. நகர் ஊரமைப்பு ஆணையர், 807, அண்ணாசாலை,
   சென்னை (வரைபடத்துடன் சமர்ப்பிக்கப்படுகிறது)

3. உறுப்பினர் செயலர் (பொ) (வரைபடத்துடன்)
   காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், காஞ்சிபுரம்.

4. சார்பதிவாளர் இணை-IV,
   தாலுக்கா அலுவலக வளாகம்,
   காஞ்சிபுரம்.
   } சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு

5. உதவி இயக்குநர், (நில அளவை)
   மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்
   காஞ்சிபுரம்.

6. வட்டாசியர், காஞ்சிபுரம் வட்டம்,
   காஞ்சிபுரம் மாவட்டம்.

} (5, 6) சாலை மற்றும் OSR பகுதியினை உட்பிரிவு செய்து உள்ளாட்சி பெயரில் மாற்றம் செய்யும் பொருட்டு.